RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 72 மார்ச்.21 2026 சனிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# தொலைநோக்கு திட்டத்துடன் விரைவில் திமுக தேர்தல் அறிக்கை; முதல்வர் ஸ்டாலின்



சென்னை: மார்ச்.21-

''தமிழகம் 2030 எனும் தொலைநோக்கு திட்டத்துடன் திமுக தேர்தல் அறிக்கை வெகு விரைவில் வெளியிடப்படும்'' என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: தமிழகம் 2030 எனும் தொலைநோக்குத் திட்டத்தின் அடிப்படையிலும், அதனை சிறப்பாகவும் நேர்த்தியாகவும் நிறைவேற்றுகின்ற வகையிலும், கூடுதல் அம்சங்களுடன் 2026 சட்டசபை தேர்தல் களத்திற்கான திமுகவின் தேர்தல் அறிக்கை வெகு விரைவில் வெளியாக இருக்கிறது. எந்தத் தேர்தல் களமாக இருந்தாலும் மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய தேர்தல் அறிக்கை என்றால் அது திமுகவின் தேர்தல் அறிக்கைதான்.

2021 முதல் 2026 வரையிலான 5 ஆண்டுகளில் இந்தியாவில் எந்த மாநிலமும் செய்ய முடியாத சாதனைத் திட்டங்களையும், இந்தியாவின் பல மாநிலங்கள் பின்பற்றக்கூடிய முதன்மையான திட்டங்களையும் நிறைவேற்றியுள்ள திராவிட மாடல் அரசின் சாதனைகளையும், அதனால் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் கிடைத்துள்ள பயன்களையும், அவர்களின் வாழ்வில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும் இடைவிடாது பிரசாரம் செய்யும் பணியை திமுகவினர் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும்.

தமிழகம் VS டில்லி என்பதை முன்வைத்துதான் இந்தத் தேர்தல் களம் என்று நாம் சொல்வதை நிரூபிப்பது போலவே, டில்லியில் இருந்துதான் எல்லாம் முடிவு செய்யப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் இபிஎஸ் டில்லியில் இருப்பது எதற்காக? தமிழகத்திற்கு வழங்கப்படாமல் வஞ்சிக்கப்படும் நிதியை வாங்கித் தருவதற்காகவா? தமிழகத்தில் நிறைவேற்றப் படாமல் முடக்கப்பட்டிருக்கும் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்துவதற்காகவா?

மாநில உரிமைகளைக் காப்பாற்றுவதற்காகவா? சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காகவா? இல்லை.. இல்லை.. இல்லவே இல்லை. தமிழகத்தில் உள்ள வீடுகளில் அடுப்பு எரிந்தால் என்ன, எரியாவிட்டால் எங்களுக்கென்ன என்ற மனநிலையுடன்தான் எதிர்க்கட்சியினர் தங்களது கூட்டணிப் பேச்சுவார்த்தையை நடத்திக் கொண்டிருக்கிறனர்.

தேர்தல் களத்தைச் சந்திப்பதற்கே டில்லியின் சம்மதம் வேண்டும் என்ற நிலையில் உள்ளவர்களின் கைகளில் தமிழகம் சிக்கிக்கொண்டால் ஒவ்வொரு நாளும் என்ன பாடுபட வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்துள்ள தமிழ் மக்கள் ஒருபோதும் டில்லியின் ஆதிக்கத்தையும், அதன் அடிமைக் கூட்டத்தையும் அனுமதிக்க மாட்டார்கள். தங்கள் சுயநலனுக்காகச் சொந்தக் கட்சியை அடமானம் வைத்தது போல, தமிழகத்தையும், டில்லியிடம் அடகு வைக்கத் தயங்காதவர்கள் அவர்கள் என்பதை மக்கள் அறிவார்கள்.

இனி எதிர்க்கட்சியினர் எடுக்கும் முடிவு என்பது டில்லி எடுக்கும் முடிவுதான் என்பதையும் மக்கள் உணர்ந்தே இருக்கிறார்கள். தமிழகத்தின் உரிமைகளைக் காப்பதற்கும், தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்குமான வலிமை திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கே உண்டு என்பதே மக்களின் உறுதியான நம்பிக்கை. அந்த நம்பிக்கையை உருவாக்கியது திராவிட மாடல் ஆட்சி. அதனால் நாம் மக்களிடம் செல்வோம். களத்தில் நின்று வெற்றியைப் பெறுவோம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

## "கூவிக் கூவி அழைத்தும் தவெகவுடன் கூட்டணிக்கு யாரும் வரவில்லை" : அமைச்சர் சேகர்பாபு



சென்னை: மார்ச்.21-

"கூவிக் கூவி அழைத்தும் அவர்களுடன் (தவெக) கூட்டணிக்கு யாரும் வரவில்லை" என அமைச்சர் சேகர்பாபு விமர்சனம் செய்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "மக்கள் பணிகளை மையப்படுத்தி மட்டுமே தேர்தல் களத்தில் இருக்கிறோம். பேய், பிசாசு, பூச்சாண்டிகளுக்கு எல்லாம் பயப்படும் இயக்கம் திமுக அல்ல. மக்கள் சக்தி யார் பின்னால் இருக்கிறது என மே 4ம் தேதி தான் தெரியவரும். 60 ஆண்டுகால உழைப்பு, முதல்வர் ஸ்டாலின் ஆற்றியுள்ள மக்கள் நலப் பணிகளுக்கு வர இருக்கும் தேர்தலில் முடிவு தெரியும்.

கூவிக் கூவி அழைத்தும் தவெகவுடன் கூட்டணிக்கு யாரும் வரவில்லை; ஆனால் முதல்வர் ஸ்டாலின் அனைவரையும் அரவணைத்துச் செல்பவர். திமுக கூட்டணி வலுவானது. 234 தொகுதிகளிலும் திமுக கூட்டணி வெற்றி பெறும். சென்னையை ஒட்டியுள்ள தொகுதிகளில் கடந்த முறையை விட அதிகமாக வெற்றி கொள்வோம்." இவ்வாறு சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

## "அதிமுகவை எதிர்க்க இயலாமல் 'டெல்லி அணி' என திசை திருப்புகிறார் முதல்வர்" டிடிவி தினகரன்



சென்னை: மார்ச்.21-

"அதிமுகவை எதிர்க்க தைரியம் இல்லாமல், 'டெல்லி அணி' என்று திசை திருப்பப் பார்க்கிறார் முதல்வர் ஸ்டாலின்," என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் கூறியுள்ளார்.

நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவையில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணியில் இடம் பெற்றுள்ளது. சட்டப்பேரவை தேர்தல் தேதி அறிவிப்புக்கு பிறகு நேற்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி டெல்லி சென்றுவந்த நிலையில் இன்று டிடிவி தினகரன் டெல்லி செல்ல சென்னை விமான நிலையம் வந்தார்.

முன்னதாக செய்தியாளர்களை சந்தித்த அவர், "அதிமுக தலைமையிலான தே.ஜ.கூட்டணி தமிழக சட்டப்பேரவையில் போட்டியிட இருக்கிறது. இக்கூட்டணியில் பாஜக அங்கம் வகிக்கின்றது, நாங்கள் அவர்களுடன் கூட்டணியில் இருக்கின்றோம் (அமமுக). எனவே அந்த கூட்டணியில் உள்ள பாஜகவின் டெல்லி தலைமை எங்களிடம் பேச்சுவார்த்தை நடத்துகிறது.

இந்த சந்திப்பு நான்கு நாட்களுக்கு முன்பாக கிடைக்கப்பெற்ற அழைப்பை பொருத்தே நடக்கிறது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை பொருத்தவரை, இது அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணி மட்டுமே. இதனை ஊடகங்கள் வாயிலாக முதல்வருக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்." என்றார்.

மத்திய அரசிடம் நிதியை பெற்றுத் தர வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை குறித்து பேசிய தினகரன், "தேர்தல் அறிவிப்புக்கு பிறகு மத்திய அரசிடம் எப்படி நிதியை பெற்றுத் தர முடியும் ?.

கடந்த 5 ஆண்டுகளில் மத்திய அரசிடம் இருந்து கிடைத்த நிதியை திமுக எப்படி சுரண்டியது என்பது மக்களுக்கு நன்றாக தெரியும். திமுகவை அகற்ற வேண்டும் என்று வாக்குப்பதிவு நாளுக்காக தமிழக மக்கள் காத்துகொண்டு இருக்கின்றனர்.

அதிமுகவை எதிர்க்க தைரியம் இல்லாமல், 'டெல்லி அணி' என்று திசை திருப்பப் பார்க்கிறார் முதல்வர். இவர்கள் மத்தியில் அத்தனை ஆண்டு காலம் இருந்தும் தமிழக மக்களுக்கு என்று என்ன செய்தார்கள். நீட் தேர்வை கொண்டு வந்தது திமுக, இலங்கை தமிழர்களை கொன்று குவிக்கும் போது மத்தியில் அங்கம் வகித்து வாய்மூடி மவுனம் காத்துவிட்டு, என்டிஏ கூட்டணி குறித்து பேச திமுகவினருக்கு தகுதி இல்லை." என்று டிடிவி தினகரன் கூறினார்.

## 'செலவு எகிறிவிடும்' என எச்சரிக்கை: தேர்தல் அறிவித்தும் களத்தில் இறங்காத அரசியல் கட்சிகள்!




சேலம்: மார்ச்.21-

வேட்புமனு தாக்கலுக்கே 2 வார காலம் அவகாசம் இருப்பதால், இப்போதே பிரச்சாரத்தை தொடங்கினால் செலவு அதிகமாகிவிடும் என்று சேலம் மாவட்டத்தில் அரசியல் கட்சிகள் பிரச்சாரத்தில் களமிறங்காமல் அமைதியாக இருக்கின்றன.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் தேதி 15ம் தேதி அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துவிட்டன. இந்நிலையில், தேர்தல் என வந்துவிட்டாலே அனல் பறக்கும் பிரச்சாரங்களில் அரசியல் கட்சிகள் இறங்கிவிடும்.

வேட்பாளர்களின் பெயரை அறிவித்து, அவரது கட்சிக்கு வாக்களிக்க வலியுறுத்தி வாகனங்களில் ஒலிபெருக்கிகளை வைத்து, தெருத்தெருவாக பிரச்சாரம் செய்வது, வேட்பாளர் குறித்த விளம்பரம் செய்வதற்கு சுவர்களை முன்பதிவு செய்து வைப்பது, துண்டுப் பிரசுரங்களை அள்ளி வீசுவது என தேர்தல் பிரச்சாரங்கள் களைகட்டியிருக்கும்.

ஆனால், தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்னரும், தமிழகத்தில் அரசியல் கட்சிகளிடையே கூட்டணி தொகுதிப் பங்கீடு முடியாமல் இருப்பதால், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என எந்தக்கட்சியின் கூட்டணியிலும் வேட்பாளர்கள் அறிவிக்கப்படவில்லை.

மேலும், புதிய கட்சிகள் சிலவற்றில் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுவிட்டாலும், எவரும் பிரச்சாரத்தில் களமிறங்காமல் அமைதியாக இருக்கின்றனர்.

இது குறித்த அரசியல் கட்சியினர் கூறியதாவது: ஒவ்வொரு தொகுதியிலும் தற்போது எம்எல்ஏவாக இருப்பவர்களுக்கு, மீண்டும் அதே தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கிடைக்குமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

மேலும், எம்எல்ஏவாக இருப்பவரின் தொகுதி, கூட்டணி கட்சிக்கு ஒதுக்கப்படவும் வாய்ப்பு உள்ளது. இந்த நிலையில், கட்சிகளிடையே கூட்டணிப் பங்கீடே இன்னமும் முடிவாகவில்லை.

அதன் பின்னர் தான் தொகுதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகியவற்றில், புது முகங்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என்று தகவல்கள் வருகின்றன.

எனவே, சீட் கிடைப்பது உறுதியான பின்னரே, தேர்தல் பிரச்சாரத்துக்கு செலவழிக்க வேண்டும் என்று எல்லோரும் காத்துள்ளனர். மேலும், வேட்புமனு தாக்கல் வரும் 30ம் தேதி தான் தொடங்க உள்ளது.

சுமார் 2 வார கால அவகாசம் இருக்கும் நிலையில், இப்போதே பிரச்சாரத்துக்கு செலவு செய்துவிட்டால், தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டால், கடைசி நேரத்தில் பிரச்சாரம் செய்வதற்கு செலவு செய்ய முடியாத நிலை ஏற்படும். எனவே, பொறுமையாக பிரச்சாரத்தை தொடங்கலாம் என காத்திருக்கிறோம், என்றனர்.

இதனிடையே, 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தி கையெழுத்து இயக்கம், பேரணி, இருசக்கர வாகன பேரணி என தேர்தல் ஆணையம் தேர்தலுக்கான பிரச்சாரத்தை முடுக்கிவிட்டுள்ளது.

மேலும், ஒவ்வொரு தொகுதியிலும் பறக்கும் படை சோதனை, நிலைக்குழு கண்காணிப்பு என தேர்தல் ஆணையம் மட்டுமே, இப்போது தேர்தல் களத்தில் பரபரப்பாக இயங்கிக் கொண்டுள்ளது.

## தேர்தல் நடத்தை விதிகளை அமல்படுத்த சென்னை விமான நிலையத்தில் அதிகாரிகள் நியமனம்




சென்னை: மார்ச்.21-

சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நடத்தை விதிகளை அமல்படுத்தும் விதமாக சென்னை விமான நிலையத்தில் சிறப்பு அதிகாரிகளை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.23ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பு கடந்த மார்ச் 15ம் தேதி வெளியான நிலையில், தமிழகம் முழுவதும், தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்து உள்ளன.

2106 பறக்கும் படைகள், நிலை கண்காணிப்பு படைகள் சோதனையில் ஈடுபட்டு வருகின்றன. மேலும், விமான நிலையங்களையும் கண்காணிக்க தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

அதன்படி, சென்னை சர்வதேச விமான நிலையம், சென்னை விமான நிலைய கார்கோ பகுதி ஆகியவற்றை கண்காணிக்க, சிறப்பு அதிகாரிகளை இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

சென்னை சர்வதேச விமான நிலையத்தின் வருகை, புறப்பாடு பகுதிகளில் சுங்கச் சோதனைகளை கண்காணிக்க, சுங்கத்துறை இணை ஆணையர் அந்தஸ்தில், சிறப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல், சென்னை விமான நிலைய கார்கோ பகுதிகளில், சரக்குகள் ஏற்றுமதி, இறக்குமதி பகுதிகளில் சுங்கச்சோதனை பிரிவுகளில் கண்காணிப்பதற்காக இணை ஆணையர் அந்தஸ்தில் மற்றொரு சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் சென்னை விமான நிலையத்தில் பயணிகள், பார்சல்களை தீவிரமாக கண்காணித்து, சந்தேகத்துக்கிடமான தங்கம், வெள்ளி, மின்சாதன பொருட்கள், போதைப் பொருட்கள், போதை மாத்திரைகள், கணக்கில் வராத ரொக்கம் போன்றவைகள் வந்தால், அவற்றை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடத்தலின் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்று முழுமையாக விசாரித்து, டெல்லியில் உள்ள தலைமை தேர்தல் அதிகாரிக்கு உடனடியாக அறிக்கை அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

அத்துடன், சென்னை விமான நிலையத்தில் உள்ள வருமான வரித் துறையினரும், தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். அவர்களும் கூடுதல் கண்காணிப்பு அலுவலர்களை நியமித்துள்ளனர்.



■ சென்னை மடிப்பாக்கம் சதாசிவம் நகரில், சாய்ராம் தங்க மாளிகை மூன்றாவது புதிய கிளை திறப்பு விழா நடைபெற்றது. வாடிக்கையாளர்களுக்கு தேவையான புதிய டிசைன்களில் தங்க நகைகளை அறிமுகப்படுத்தியுள்ளனர். திறப்பு விழாவிற்கு வருகை தந்த அனைவரையும், கடை உரிமையாளர்கள் அமர், சத்ருகான் வரவேற்றனர்.




## சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக பகுதி, ஒன்றிய, பேரூர், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

மாதவரம், மார்ச். 21-

சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக பகுதி, ஒன்றிய, பேரூர், வட்டக் கழகச் செயலாளர்கள் அவரச ஆலோசனைக் கூட்டம் மாதவரம் ராஜராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில் நடைபெற்றது. சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.சுதர்சனம் கலந்து கொண்டு கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்தும், ஏப்ரல் 23 நடைபெற உள்ள தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயிக்க வைப்பதோடு, இரவு பகல் பாராமல் அவர்கள் வெற்றிக்கு பாடுபட வேண்டும் என்றும் ஆலோசிக்கப்பட்டது. இதில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர், மாவட்ட நிர்வாகிகள் ராமகிருஷ்ணன், ராசேந்திரன், அறிவழகி, ஆனந்தன், மதிவாணன், பகுதி செயலாளர்கள் தனியரசு, ஆறுமுகம், அருள்தாசன், துக்காராம், நாராயணன், ஒன்றிய செயலாளர்கள் கர்ணாகரன், தயாளன், அற்புதராஜ், சுதாகர், பொதுக்குழு உறுப்பினர் ஜெய்மதன், மண்டலக் குழுத் தலைவர் நந்தகோபால், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மதன்குமார், துணை அமைப்பாளர் சீனிவாசன், மணிவண்ணன், வட்டச் செயலாளர்கள் தாமரைச்செல்வன், சுந்தரேசன், மகேஷ், சுந்தரம், சரவணன், துரை ஸ்ரீராமுலு, முன்னாள் ஒன்றிய செயலாளர் சரவணன் உள்ளிட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாவட்ட, பகுதி, ஒன்றிய, ஊராட்சி, கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

## "ஈரான் சிதைக்கப்படுகிறது; போர் விரைவில் முடிவுக்கு வரும்" நெதன்யாகு உறுதி

டெல் அவிவ், மார்ச்.21-

"ஈரானால் இனி யுரேனியத்தை செறிவூட்டவோ அல்லது பாலிஸ்டிக் ஏவுகணைகளை தயாரிக்கவோ முடியாது. போரில் நாம் வெற்றி பெறுகிறோம், ஈரான் சிதைக்கப்படுகிறது" என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறினார்.

இது குறித்து ஊடகங்களிடம் பேசிய நெதன்யாகு, "முதலில், நான் உயிருடன் இருக்கிறேன் என்று சொல்ல விரும்புகிறேன். பாலிஸ்டிக் ஏவுகணைகளை தயாரிப்பதற்கான பாகங்களையும், அணு ஆயுதங்களை தயாரிக்க முயற்சிக்கும் அவர்களின் தொழிற்சாலைகளையும்தான் நாம் இப்போது அழித்துக் கொண்டிருக்கிறோம். ஈரானின் ஏவுகணை மற்றும் ட்ரோன் ஆயுதக் கிடங்கு மிகப் பெரிய அளவில் சிதைக்கப்பட்டு அழிக்கப்படும்.



இஸ்ரேல் தான் அமெரிக்காவை இந்த போருக்குள் இழுத்துவிட்டது என்பது உண்மையில்லை. அதிபர் டொனால்டு ட்ரம்புக்கு என்ன செய்ய வேண்டும் என்று யாராவது சொல்ல முடியும் என உண்மையிலேயே நீங்கள் நினைக்கிறார்களா?. அமெரிக்காவுக்கு எது நல்லது என்று அவர் நினைக்கிறாரோ, அதன் அடிப்படையிலேயே எப்போதும் அவர் தனது முடிவுகளை எடுக்கிறார்.

அதிபர் ட்ரம்ப்புடன் நெருங்கிய ஒருங்கிணைப்பிலும், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு இடையேயான நெருங்கிய ஒருங்கிணைப்பிலும், எங்கள் ராணுவங்கள், உளவுத்துறை ஆகியவற்றின் ஒருங்கிணைப்பின் மூலம், நாங்கள் மின்னல் வேகத்தில் இலக்குகளை அடைந்து வருகிறோம்.

இந்தப் போரில் அமெரிக்க இஸ்ரேல் கூட்டாண்மை மிகவும் முக்கியமானது. நாங்கள் முழு மத்திய கிழக்கையும் பாதுகாக்கிறோம். மேலும், முழு உலகத்தையும் பாதுகாக்கிறோம் என்று நான் துணிந்து கூறுவேன். ஈரான் விஷயத்தில் நானும் ட்ரம்ப்பும் ஒரே நிலைப்பாட்டில் இருக்கிறோம் உலகம் ட்ரம்ப்புக்கு மிகவும் நன்றிக்கடன் பட்டுள்ளது.

ட்ரம்பின் கோரிக்கையைத் தொடர்ந்து, ஈரானின் முக்கிய எரிவாயு வயல்கள் மீதான தாக்குதல்களை இஸ்ரேல் நிறுத்தி வைக்கும். முதல் உண்மை, தெற்கு பார்ஸ் எரிவாயு வளாகத்துக்கு எதிராக இஸ்ரேல் தனியாகவே செயல்பட்டது. இரண்டாவது உண்மை, எதிர்காலத் தாக்குதல்களைத் தள்ளிப்போடுமாறு அதிபர் ட்ரம்ப் எங்களிடம் கேட்டுக்கொண்டார், நாங்கள் தள்ளிப்போட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஈரானின் ராணுவ உள்கட்டமைப்பு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. போரில் நாம் வெற்றி பெறுகிறோம், ஈரான் சிதை க்கப்ப டுகிறது. தற்போது ஈரானை யார் நடத்துகிறார்கள் என்று எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. ஈரான் உயர் அதிகாரிகளிடையே மிகுந்த பதற்றம் நிலவுகிறது. போர் நாம் எதிர்பார்ப்பதை விட விரைவாக முடிவுக்கு வரும். " என்று அவர் கூறினார்.

## உடல் உறுப்பு தானம் செய்து ஏழு பேருக்கு உயிர் கொடுத்த செய்தியாளர் - அரசு மரியாதையுடன் அஞ்சலி, போட்டோ வீடியோ சங்கம் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை வழங்க மனு

கிருஷ்ணகிரி,மார்ச். 21-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணத்தைச் சேர்ந்த செய்தியாளர் என்.அன்பரசு சாலை விபத்தில் மூளைச் சாவு அடைந்த நிலையில், அவரது உடல் உறுப்புகள் தானமாக வழங்கப்பட்டு ஏழு பேருக்கு புதிய உயிர் அளிக்கப்பட்டது. மனிதநேயத்தின் உயர்ந்த உதாரணமாக அமைந்த இந்த செயல் சமூகத்தில் பெரும் பாராட்டை பெற்றுள்ளது.



இந்நிலையில், அன்பரசு அவர்களின் உடலுக்கு கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அரசு மரியாதை செலுத்தப்பட்டது. மாவட்ட கலெக்டர் ச. தினேஷ் குமார் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். நிகழ்வில் மருத்துவக் கல்லூரி முதல்வர் கனக சபை சத்தியபாமா, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு வீடியோ போட்டோ சங்கத்தின் "காக்கும் கரங்கள்" திட்ட மாநில தலைவர் Ln.A. சிவகுமார், அன்பரசு அவர்களின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்க வேண்டும் எனக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தார். இந்த மனுவில், உடல் உறுப்பு தானம் மூலம் பலருக்கு உயிர் கொடுத்த அவரது சேவையை கருத்தில் கொண்டு குடும்பத்திற்கு உரிய ஆதரவு வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இந்த மனுவை பெற்ற மாவட்ட கலெக்டர், அதனை பரிசீலனை செய்து மாநில அரசுக்கு பரிந்துரை செய்யப்படும் என உறுதியளித்தார். நிகழ்ச்சியில் மாநில பொதுச் செயலாளர் சுரேஷ், மாநில பொருளாளர் பொன்னுசாமி, மாநில அமைப்பாளர் அசோக், மாநில துணைத்தலைவர் சக்கரவர்த்தி, கிருஷ்ணகிரி மாவட்ட பிரஸ் கிளப் தலைவர் குமரேசன், செயலாளர் லோகசந்தர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், மருத்துவமனை கண்காணிப்பாளர், மருத்துவர்கள், செவிலியர்கள், செய்தியாளர்கள், புகைப்பட கலைஞர்கள் மற்றும் சங்க நிர்வாகிகள் பலரும் பங்கேற்று அன்பரசு அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். அவரது உடல் உறுப்பு தானம் மனிதநேயத்தின் உயர்ந்த எடுத்துக்காட்டாக நினைவுகூரப்படுகிறது.

## பழனி கீரனூர் பகுதியைச் சேர்ந்த கோல்டன் கல்வி நிறுவனர் மாசிலாமணி காளியப்பன் வெள்ளாளர் முன்னேற்ற சங்க மாநில துணை செயலாளராக நியமனம்

திண்டுக்கல், மார்ச்.21-

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள வெள்ளாளர் சமூக மக்களின் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக உழைக்கும் நபர்களே இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் வெள்ளாளர் முன்னேற்ற கழகத்தின் நிறுவனத் தலைவர் ஜோதிமுருகன் அறிவிப்பின்படி, கழகத்தின் வளர்ச்சிப் பணிகளுக்காகப் புதிய மாநில துணைச் செயலாளராக கீரனூர் பகுதியைச் சேர்ந்த கோல்டன் கல்வி நிறுவனர் மாசிலாமணி காளியப்பன் நியமிக்கப்பட்டுள்ளார்.



இந்த நியமனமானது கழக நிர்வாகிகளின் ஆலோசனையின்படி சங்கத்தின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் வழங்கப்பட்டுள்ளது

கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அனைவரும் புதிய மாநில துணைச் செயலாளருடன் இணைந்து செயல்படுமாறு தலைமை கேட்டுக்கொண்டுள்ளது

மாநில துணைச் செயலாளர் பதவி என்பது அந்தச் சங்கத்தின் முக்கிய நிர்வாகப் பொறுப்புகளில் ஒன்றாகும்.

சங்கத்தின் மாநில அளவிலான முடிவுகள் மற்றும் மாவட்ட வாரியான செயல்பாடுகளை ஒருங்கிணைக்க இந்த பதவி வகிப்பவர்கள். மற்றும் புதிய மாநில துணைச் செயலாளர் மாசிலாமணிக்கு நிர்வாகிகள் வாட்ஸ் அப். பேஸ்புக் மற்றும் நேரில் வாழ்த்துக்கள் கூறிய வண்ணம் உள்ளனர்



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்2026 முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள ஊடக சான்றிதழ் மற்றும் கண்காணிப்பு குழு அறையினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில், ஊடகங்கள் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு அலுவலர் சு.ஜெகவீரபாண்டியன் அவர்கள் உட்பட பலர் உள்ளனர்.



## மோட்டுப்பட்டியில் மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டி துவக்கம் - எல். சுப்பிரமணியன் தொடங்கி வைப்பு

கிருஷ்ணகிரி,மார்ச். 21-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியம் மிட்டஹள்ளி ஊராட்சிக்குட்பட்ட மோட்டுப்பட்டி கிராமத்தில், யுவராஜ் பிரதர்ஸ் சார்பில் 7வது ஆண்டு மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டி சிறப்பாக துவங்கியது.

இந்த போட்டியில் கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், கூரப்பட்டி, ஊத்தங்கரை உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான கிரிக்கெட் அணிகள் கலந்து கொண்டு விளையாடுகின்றன. நாக்அவுட் முறையில் நடைபெறும் இந்த போட்டி வீரர்களுக்கு போட்டித் திறனை வெளிப்படுத்தும் நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது.

போட்டியை காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினரும், முன்னாள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவரும், முன்னாள் மிட்டஹள்ளி ஊராட்சி மன்றத் தலைவருமான எல். சுப்பிரமணியன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு துவக்கி வைத்தார். மேலும், அவர் கிரிக்கெட் வீரர்களை பாராட்டி உற்சாகப்படுத்தினார்.

மூன்று நாட்கள் நடைபெற உள்ள இந்த கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கு ஊக்கப்பரிசுகளும் சுழல் கோப்பையும் வழங்கப்பட உள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.




■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு பொதுமக்களிடையே தேர்தல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 100% வாக்களிப்போம் வாசகம் மற்றும் என் வாக்கு என் உரிமை என மகளிர்கள் தங்கள் கைகளில் மெகந்தி வரைந்து விழிப்புணர்வு ஏற்படுத்திய நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., கலந்து கொண்டு முதன்முறை வாக்காளர்களுக்கு கைகளில் மெகந்தி வரைந்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் வானதி உடன் உள்ளார்.




■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு தாபல் வாக்குப்பதிவு மற்றும் வேட்புமனு தாக்கல் குறித்து பயிற்சி மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது.

## விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளுக்கும் 23.04.2026 அன்று சட்டமன்ற தேர்தல் நடைபெறும்

விருதுநகர், மார்ச்.21-

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளுக்கும் 23.04.2026 அன்று சட்டமன்ற தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் 15.03.2026 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டதை தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ளது.



எனவே, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கட்கிழமை தோறும் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் மற்றும் இதர குறைதீர்க்கும் கூட்டங்கள் நடைபெறாது.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிவுற்ற பின்னர் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் அறிவிக்கப்படும். பொதுமக்களிடம் இருந்து மனுக்களைப் பெறுவதற்கென, மனுப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தெரிவித்துள்ளார்.



■ யுகாதி பண்டிகையை முன்னிட்டு மதுரை கூடலழகர் பெருமாள் கோவிலில் தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கத்தின் சார்பில் ஏழைகளுக்கு இலவச சேலைகள் வழங்கப்பட்டன. இதில் மாநில துணை செயலாளர் பிரபு, பொதுச் செயலாளர் போஸ், ஆடிட்டர் சீனிவாசன், சப்னா மகாராஜன், கேசவன்,ராமதாஸ், இளைஞரணி சுந்தர், ஜெகநாதன் உள்பட பலர் உள்ளனர்.

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவல கட்டுப்பாட்டு அறை கூட்டரங்கில் நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் இந்திய தேர்தல் ஆணையத்தால் நீலகிரி மாவட்டதிற்கு நியமிக்கபட்டுள்ளதேர்தல் பொறுப்பு அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம்

நீலகிரி, மார்ச்.21-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 தொடர்பான தேர்தல் பணிகள் சுமூகமாகவும், சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், இந்திய தேர்தல் ஆணையத்தால் நீலகிரி மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட பொது பார்வையாளர்கள் 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி தான்வி சுந்த்ரியல், , 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி எஸ். ஹரீஷ், , 110 குன்னூர் சட்டமன்ற தொகுதி சுஹாஸ் காவல் பார்வையாளர் லதா மனோஜ் மற்றும் செலவு கண்காணிப்பு பார்வையாளர்கள் 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி கஜேந்திர சிங்109 கூடலூர் சட்டமன்ற தொகுதி வைபவ் மாதவ் ராவ்

110 குன்னூர் சட்டமன்ற தொகுதி அஜித் டான் ஐ.ஆர்.எஸ் ஆகியோர் தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்



லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், தேர்தல் பொறுப்பு அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுப்பாட்டு அறை கூட்டரங்கில் நடைபெற்றது.இக் கூட்டத்தில், பொது பார்வையாளர்கள், காவல் பார்வையாளர் மற்றும் செலவு கண்காணிப்பு பார்வையாளர்கள் ஆகியோர், 108 உதகமண்டமலம், 109 கூடலூர் மற்றும் 110 குன்னூர் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் உள்ள வாக்காளர்களின் விவரங்கள், வாக்குசாவடி மையங்களின் எண்ணிக்கை, வாக்குசாவடிகளில் மேற்கொள்ளப்பட்டள்ள அடிப்படை வசதிகள், தேர்தல் பறக்கும் படை குழுவினர்கள், தேர்தல் நிலையான கண்காணிப்பு குழுவினர்கள் வாகன சோதனை செய்யும் விவரங்கள், கட்டுப்பாட்டு அறையின் மூலம் கண்காணிக்கப்படும் ஊடக கண்காணிப்பு மையம், சமூக ஊடகங்கள், சீ விஜில் மற்றும் பதற்றமான வாக்குசாவடிகளில் காவல்துறையின் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்வை குறித்து கேட்டறிந்தார்கள்.

இக்கூட்டத்தில், பொது பார்வையாளர்கள், காவல் பார்வையாளர் மற்றும் செலவு கண்காணிப்பு பார்வையாளர்கள் ஆகியோர் தெரிவித்ததாவது:

அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்களும், தங்களது சட்டமன்ற தொகுதியிலுள்ள அனைத்து வாக்குசாவடி மையங்களை ஆய்வு செய்ய வேண்டும். சீ விஜில் செயலி தொடர்பாக பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் தேவையான விளம்பர பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், கடந்த தேர்தலின்போது வாக்குகள் குறைவாக பதிவுவான வாக்கசாவடி மையங்களின் அருகில் தேவையான விழிப்பணர்வு பணிகளை மேற்கொண்டு, வாக்கு எண்ணிக்கை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும், வேட்பாளரின் பெயர் மற்றும் புகைப்படத்துடன் சின்னம் பொருத்தும் பணிகளில், அனைத்து தேர்தல் ந்த்தும் அலுவலர்கள் மிகவும்

கவனத்துடன் செயல்பட வேண்டுமெனவும், தேர்தல் பறக்கும் படை குழுவினர்கள் மற்றும் தேர்தல் நிலையான கண்காணிப்பு குழுவினர்கள் இரவு நேரங்களில் மாநில எல்லையோர பகுதிகள் மற்றும் இதர பகுதிகளில் வாகன சோதனை பணிகளை தீவிர படுத்த வேண்டுமெனவும் தெரிவித்தார்கள்.

பின்னர், பொது பார்வையாளர்கள், காவல் பார்வையாளர் மற்றும் செலவின பார்வையாளர்கள் ஆகியோர், கட்டுப்பாட்டு அறையின் மூலம் கண்காணிக்கப்படும் ஊடக கண்காணிப்பு மையம், சமூக ஊடகங்கள், சீ விஜில் தேர்தல் பறக்கும் படை குழுவினர்களின் செயல்பாடுகள், தேர்தல் நிலையான கண்காணிப்பு குழுவினர்கள் செயல்பாடுகளையும், தேர்தல் நடத்தை விதிமீறல்கள் தொடர்பாக இலவச தொலைபேசி எண் 1950 என்ற எண்ணில் பெறப்பட்ட புகார்கள் மற்றும் அதன்மீது எடுக்கப்ட்ட நடவடிக்கைகள் குறித்து பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.மேலும், 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி திருமதி தான்வி சுந்த்ரியல், இ.ஆ.ப அவர்களை 8072843589 என்ற எண்ணிலும், 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி எஸ். ஹரீஷ், அவர்களை 8248203626 என்ற எண்ணிலும், 110 குன்னூர் சட்டமன்ற தொகுதி சுஹாஸ் அவர்களை 8610565434 என்ற எண்ணிலும், காவல் பார்வையாளர் லதா மனோஜ் அவர்களை 9080130347 என்ற எண்ணிலும், செலவு கண்காணிப்பு பார்வையாளர்கள் 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி . கஜேந்திர சிங் ஐ.ஆர்.எஸ் அவர்களை 6381895641 என்ற எண்ணிலும், 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி வைபவ் மாதவ் ராவ் அவர்களை 6380131373 என்ற எண்ணிலும், 110 குன்னூர் சட்டமன்ற தொகுதி அஜித் டான் அவர்களை 6380677984 என்ற எண்ணிலும் பொதுமக்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் தேர்தல் தொடர்பான புகார்கள் ஏதேனும் இருப்பின், சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதி பார்வையாளர்களை உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில் காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை நேரில் சந்தித்து மனுக்கள் வழங்கலாம், அல்லது தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர் / கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், தேர்தல் நடத்தும் அலுவலர் / குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / வருவாய் கோட்டாட்சியர்கள் டினு அரவிந்த் (உதகை), குனசேகரன் (கூடலூர்) மற்றும் அனைத்து தேர்தல் பொறுப்பு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# வாக்குப் பதிவு தினத்தன்று பொதுவிடுமுறை தமிழக அரசுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல்

சென்னை, மார்ச்.21-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு நடைபெறும் ஏப் .23ம் தேதி அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பொது விடுமுறை விட வேண்டும் என்று தமிழக அரசுக்கு, தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

தமிழக சட்டப்பேரவைக்கான தேர்தல் வாக்குப்பதிவு வரும் ஏப்.23 ம் தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தலில் 2.90 கோடி பெண், 2.78 கோடி ஆண், 7,656 திருநங்கைகள் என மொத்தம் 5.69 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

இந்நிலையில், தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு, பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்கள், அனைத்து கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கு ஏப்.23ம் தேதி சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறை விட வேண்டும்.

தொழிலாளர் பணியாற்றும் தொகுதியில் தேர்தல் நடைபெறாவிட்டாலும், தேர்தல் நடைபெறும் தொகுதியில், அந்த தொழிலாளி வாக்காளராக இருந்தால் அவர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு அளிக்க வேண்டும்.

தினக்கூலி தொழிலாளராக இருந்தாலும் விடுப்பு அளிக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு, இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது.

# சென்னை மூதாட்டிகளிடம் நூதன முறையில் தொடர்ச்சியாக நகைகளை திருடிய நபர் கைது

சென்னை, மார்ச்.21-

மூதாட்டிகளிடம் தொடர்ச்சியாக நூதன முறையில் நகை திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் கைது செய்யப்பட்டார். சென்னை சூளை, ஆண்டியப்பன் நாயக்கன் தெருவைச் சேர்ந்தவர் மூதாட்டி காளியம்மாள் (76).

கடந்த 17ம் தேதி காலை சூளை, வி.வி.கோவில் அருகே உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு மாத்திரைகள் வாங்க சென்று கொண்டிருந்தார்.

அப்போது, அங்கு வந்த 50 வயதுடைய ஆண் ஒருவர், காளியம்மாவிடம் நலம் விசாரித்து, இது ரமலான் மாதம் என்பதால் ஏழை மக்களுக்கு தொழில் அதிபர் ஒருவர் நகை மற்றும் பணம் கொடுக்கிறார் என நம்பிக்கையுடன் பேச்சு கொடுத்தார்.இதை உண்மை என நம்பிய மூதாட்டி, தன்னை அங்கு அழைத்துச் செல்லும்படி கூறினார். இதையடுத்து, அந்த நபர் சற்று தொலைவுக்கு அழைத்துச் சென்



று, ஒரு பூட்டிய கடையின் அருகே அமர வைத்து, 'ஏழைகளுக்கு மட்டுமே தொழில் அதிபர் நகை, பணம் கொடுக்கிறார்.

எனவே, நீங்கள் இப்படி நகை அணிந்து வந்தால் அந்த உதவி கிடைக்காது. எனவே, உங்களது நகைகளை கழட்டி கொடுங்கள், நான் வைத்துக் கொள்கிறேன். நலத்திட்ட உதவி கிடைத்த உடன் உங்களது நகைகளை திரும்ப கொடுத்து விடுகிறேன் என தெரிவித்துள்ளார்.

இதை உண்மை என நம்பிய மூதாட்டி காளியம்மாள், தனது கம்மல் மற்றும் மோதிரத்தை கழற்றி கொடுத்தார். அதை பெற்றுக் கொண்ட அந்த நபர், இங்கேயே சிறிது நேரம் இருங்கள்.அங்கு கூட்டம் எவ்வளவு உள்ளது என பார்த்து விட்டு வருகிறேன் என சென்றவர் மீண்டும் திரும்பி வரவில்லை. நீண்ட நேரமாகியும் அந்த நபர் வராததால், தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த காளியம்மாள் இது தொடர்பாக வேப்பேரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர்.இதில், நூதன முறையில் மூதாட்டியிடம் நகைகளை திருடியது சென்னை டி.பி சத்திரத்தைச் சேர்ந்த திருமலை (50) என்பது தெரிந்தது. தலைமறைவாக இருந்த அவரை போலீஸார் கைது செய்தனர்.அவரிடமிருந்து 9 கிராம் எடை கொண்ட தங்க கம்மல் மீட்கப்பட்டது. விசாரணையில், திருமலை கடந்த 16ம் தேதி இதே போல திருவிக நகர் பகுதியில் ஒரு மூதாட்டியை ஏமாற்றி தங்க நகை திருடிச் சென்றதும், இதே பாணியில் அவர் பல மூதாட்டிகளிடம் கைவரிசை காட்டி இருந்ததும் தெரிய வந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.

# ராமநாதபுரம் அருகே உரிய ஆவணம் இன்றி இரு சக்கர வாகனத்தில் எடுத்துவரப்பட்ட ரூ.8 லட்சம் பணம் பறிமுதல்

ராமநாதபுரம், மார்ச்.21-

ராமநாதபுரம் அருகே உரிய ஆவணம் இன்றி இரு சக்கர வாகனத்தில் எடுத்துவரப்பட்ட ரூ.8 லட்சம் பணத்தை பறிமுதல் செய்த தேர்தல் பறக்கும் படையினர்.பறிமுதல் செய்யப்பட்ட பணத்தை ராமநாதபுரம் வட்டாச்சியர் அலுவலரிடம் வழங்கப்பட்டது



■ இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கான மண்டல அலுவலர்களுக்கான தேர்தல் பணிகள் குறித்த பயிற்சி நடைபெற்றது. இக்கூட்டத்தில் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் பார்வையாளர் (பொது) .ஓம் பிரகாஷ் (இராமநாதபுரம்) மற்றும் ;, மாவட்ட தேர்தல் அலுவலர்ஃ மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், ஆகியோர் பங்கேற்று நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 க்கான வாக்குபதிவு நாளன்று மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து, பயிற்சி வகுப்பில் நன்கு தெரிந்து கொண்டு சிறப்பாக பணியாற்றிட வேண்டுமென அறிவுறுத்தினார்இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்; செ.ஹபிபூர் ரஹ்மான் வட்டாட்சியர்வரதன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தாம்பரம் பாரத் கல்லூரி அருகில் கோபி போட்டோஸ் ஸ்டுடியோவின் 30ஆம் ஆண்டு துவக்க விழா சிறப்பாக நடைபெற்றது

தாம்பரம் மார்ச். 21-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சேலையூரில்

கோபி போட்டோஸ் நிறுவனரும் உரிமையாளருமான தாம்பரம் முனைவர் கோபி அவர்கள் சிறந்த சமூக சேவை விருது மற்றும் மதிப்புறு முனைவர் டாக்டர் பட்டம் பெற்றவர் சினிமாத்துறையில் பணியாற்றியவர்.

கடந்த 1996 ஆம் ஆண்டு புகைப்பட தொழில் துவங்கிய முனைவர் கோபி அவர்கள்

வாடிக்கையாளர்களின் நலன் கருதி சிறப்பாக ஸ்டுடியோ தொழிலை ஒரு சேவையாக தொடர்ந்து 30 வருடமாக செய்து வருகிறார் இதன் மூலம் மக்களுக்கு கொரோனா காலகட்டதில் சொந்த செலவில் பகுதியில் உள்ள மக்கள் அனைவருக்கும் உணவு வழங்கினார்.புகைப்பட வீடியோ கலைஞர்களுக்கு மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பும் வழங்கினார்.

சுய நலம் இல்லாமல் மக்களுக்கு பணியாற்றி



வரும் முனைவர் கோபி அவர்கள் பாஜக வில் கடந்த 15 வருடங்களாக அரசியல் பணியாற்றி வருகிறார்.

2021 ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை செங்கல்பட்டு மாவட்ட செயலாளராக துடிப்புடன் செயலாற்றினார்.

அப்போது தமிழகம் முழுவதும் தாமரை யாத்திரை நடத்தி கட்சி வளர்ச்சிக்கு உழைத் தார் . மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு

ஏற்ப்பட்டது.

தாம்பரம் தொகுதியில் அனைவருக்கும் அறிமுகமானவர் பறிச்சியமான முகம்.

முனைவர் கோபி அவர்கள் ஏழை எளிய குழந்தைகளை தன் முயற்ச்சியால் படிக்க வைத்து சமூக பணியாற்றி வருகிறார்.

கடந்த வருடம் சிறுவர்கள், முதல் பெரியவர்கள் வரை ஒருங்கிணைத்து மாறத்தான் போட்டி நடத்தி காட்டினார்.

ஜனவரி மாதம் பொங்கலுக்கு தாம்பரம் புகைப்பட வீடியோ கலைஞர்களுக்கு பொங்கல் விழா நடத்தி சினிமா பிரபலங்களை அழைத்து சிறப்பு செய்தார்.

வருகின்ற தாம்பரம் சட்ட மன்ற தேர்தலில் பாஜக வாய்ப்பு அளித்தால் வெற்றி வேட்பாளராக போட்டி இட உள்ளார் என தன் விருப்பத்தை தெரிவித்துள்ளார் முன்னாள் மாவட்ட செயலாளர் தாம்பரம் முனைவர் கோபி.

# "தேர்தல் பணியில் இருக்கும் அதிகாரிகளுக்கு திமுக தொடர் அழுத்தம்" தவெக

சென்னை, மார்ச்.21-

"திமுகவினர் தொடர்ந்து தேர்தல் பணியில் இருக்கும் அதிகாரிகளுக்கு சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட அழுத்தம் கொடுப்பதும், சில அதிகாரிகள் அந்த அழுத்தத்திற்கு பணிந்து செயல்படுவதும் தேர்தல் நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடக்கும் சூழலை உருவாக்காது," என தவெக கொள்கைப் பரப்பு பொதுச் செயலாளர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "நேற்றைய தினம் திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மல்லசமுத்திரத்தில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகி நடத்தி வரும் புகழ்பெற்ற பள்ளியில் தேர்தல் பறக்கும் படையினர் சட்டத்திற்கு புறம்பான ரெய்டு நடத்தி இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

தேர்தல் ஆணையத்தின் விதிமுறைப்படி ஓரிடத்தில் கணக்கில் காட்டப்படாத பணமோ பொருட்களோ பதுக்கி வைத்திருப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டால்,



பறக்கும் படையினர் வருமான வரித்துறையினருக்கு தகவல் அனுப்பி விட்டு, அந்த இடத்திற்கு விரைந்து சென்று, அந்த இடத்தை பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு வரவேண்டும். அந்த இடத்திற்குள் நுழைந்து சோதனை செய்ய பறக்கும் படையினருக்கு அதிகாரம் இல்லை. முறையான வாரண்ட் உடன் வருமான வரித்துறையினர் தலைமையில் தான் சோதனை நடத்தப்பட வேண்டும்.

ஆனால் நேற்றைய தினம் திருச்செங்கோடு மல்லசமுத்திரம் பேரூராட்சியில் இயங்கி வரும் புகழ்பெற்ற கிரிகூஷி பள்ளியில் தேர்தல் பணியில் ஈடுபட்டிருக்கும் வெற்றிவேல் (Asst Agri Officer) தலைமையில் தேர்தல் பறக்கும் படையினர் சட்டத்திற்கு புறம்பான சோதனை நடத்தியுள்ளனர். சோதனைக்குப் பிறகு அங்கு எந்த ஒரு பணமோ பொருளோ இல்லை என்பதை உறுதிப்படுத்தி சான்றிதழ் அளித்து சென்று இருக்கிறார்கள்.

இவ்வாறு சோதனை நடத்தவோ, சோதனையில் எதுவும் கிடைக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தி கடிதம் கொடுக்கவோ தேர்தல் பறக்கும் படையினருக்கு எந்த ஒரு அதிகாரமும் இல்லை. இதேபோல் 16032026 அன்று திருச்செங்கோடு வரகுராம்பட்டியில், பட்டேல் நகர் பகுதியில் பூட்டி இருந்த வீட்டிற்குள் பரமராஜ் (Asst Agri Officer) தலைமையில் தேர்தல் பறக்கும் படையினர் அத்துமீறி உள் நுழைந்து அங்கு வைக்கப்பட்டிருந்த ரூ. 23,000 மதிப்பிலான பொருட்களை பறிமுதல் செய்துள்ளனர்.

முறையான ஆவணத்துடன், விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுப் பொருள் வழங்க திட்டமிடப்பட்டு, 15032026 அன்று தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததால், அன்று நடக்கவிருந்த போட்டிகள் நடத்தப்படாமல் பரிசுப் பொருட்கள் அந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

திமுகவினர் தொடர்ந்து தேர்தல் பணியில் இருக்கும் அதிகாரிகளுக்கு இவ்வாறான சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட அழுத்தம் கொடுப்பதும், சில அதிகாரிகள் அந்த அழுத்தத்திற்கு பணிந்து செயல்படுவதும் தேர்தல் நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடக்கும் சூழலை உருவாக்காது. மேற்கண்ட அதிகாரிகளை உடனடியாக பணியிடை மாற்றம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

அதேபோல் மூன்று வாரங்களுக்கு முன்பு ஈரோடு பள்ளிபாளையத்தில் இயங்கி வரும் தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகியின் மருத்துவமனையோடு இணைந்து நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில் கொடுக்கப்பட்ட மருந்து மாத்திரைகள், ஊட்டச்சத்து டானிக் மற்றும் பூஸ்ட் பாட்டில்களை, ஏதோ தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்த பிறகு கொடுக்கப்பட்டது போல சித்தரித்து தொடர்ந்து பொய் செய்திகள் வெளியிட்டு எனது நற்பெயருக்கு களங்கம் விளைவித்து வரும் தனியார் தொலைக்காட்சி மற்றும் ஆளுங்கட்சிக்கு சாதகமாக செயல்பட்டு வரும் சமூக ஊடக செயல்பாட்டாளர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



■ திருப்பூர் தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026 முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே திருப்பூர் மாநகராட்சி, பெரிச்சிபாளையம் பகுதியில் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு தபால் வாக்கு பதிவுக்கான படிவம் 12டி வழங்கும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை உடன் இருந்தார்..





# கீழக்கோட்டை பள்ளியின் விளையாட்டு விழா நடைபெற்றது

காளையார் கோவில் மார்ச். 21-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் பள்ளியின் விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. போட்டியினை தலைமை ஆசிரியை தெய்வானை கொடி அசைத்து தொடங்கி வைத்தார். விளையாட்டுப் போட்டிகள் 6 முதல் 8 வகுப்புகள் 4 முதல் 5 வகுப்புகள் 1 முதல் 3 வகுப்புகள் என மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு மாணவர்கள் மற்றும் மாணவிகளுக்கு தனி தனியாக நூறு மீட்டர் ஓட்டம் சாக்கு ஓட்டம் நீளம்



தாண்டுதல் குண்டு எறிதல் நினைவுத்திறன் போட்டிகள் தவளை ஓட்டம் கல் பொறுக்குதல் இசையிடை நாற்காலி லக்கி கார்னர் கபடி போட்டி கோகோ போன்ற விளையாட்டுக்கள் நடத்தப்பட்டன. விளையாட்டு போட்டிகளை அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா ஆசிரியைகள் கமலம்பாய் வாசுகி கணினி பயிற்றுனர் வித்யா யோகா மாஸ்டர் ராதா சிறப்பாக ஒருங்கிணைத்து நடத்தினார்கள். வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பெற்றோர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை பாராட்டினார்கள்.



# புள்ளிலையன் ஊராட்சி புதுநகரில் ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என்று தீவிர பரப்புரை

மாதவரம், மார்ச்..21-

மாதவரம் சட்டமன்ற தொகுதி புழல் ஒன்றியம் புள்ளிலையன் ஊராட்சிக்கு உட்பட்ட புதுநகரில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் , துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் ஆணைக்கிணங்க சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.சுதர்சனம் வழிகாட்டுதலின்படி ஒன்றிய பொறுப்பாளர் அற்புதராஜ் முன்னிலையில் முன்னாள் புள்ளிலையன் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் கே.மாதவன் தலைமையில் வீடுவீடாக சென்று திமுக ஆட்சியில் மக்களுக்கு செய்த சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வெல்லும் தமிழ் பெண்கள் மூலம் மீண்டும் ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என்று தீவிர பரப்புரை செய்து வருகின்றனர். இதில் நிர்வாகிகள் அரிபிரபாகரன், பத்மநாபன்,பிரேமலதா, மனோகரன் உள்ளிட்ட திமுகவினர்கள் உடனிருந்தனர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026 முன்னிட்டு ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை துவக்கி வைத்தார்

திருப்பூர் மார்ச். 21-

திருப்பூர் மாவட்டம் தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே திருப்பூர் மாநகராட்சி, கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையத்தில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை துவக்கி வைத்தார்கள்.



இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 101 தாராபுரம் (தனி), 102 காங்கேயம், 112 அவிநாசி(தனி), 113 திருப்பூர் (வடக்கு), 114 திருப்பூர் (தெற்கு), 115 பல்லடம், 125 உடுமலைப்பேட்டை, 126 மடத்துக்குளம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு நடைபெறவுள்ளது.

திருப்பூர் மாநகராட்சி, முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை துவக்கி வைத்து, கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்புதுறையின் அதிநவீன மின்னனு வாகனத்தில் ஒளிபரப்பப்பட்ட வாக்காளர் விழிப்புணர்வு குறும்படத்தினை பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் உதவி இயக்குநர் (பயிற்சி) செல்வி ஹர்ஷா, மாவட்ட சமூக நல அலுவலர் ரஞ்சிதாதேவி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செ.கு.சதீஸ்குமார், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) ஒ.ஆர்.மனோஜ் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# விசிக தேர்தல் பணிக்குழு மாநிலச் செயலாளர் இளைய கவுதமன் தலைவர்கள் சிலைகளுக்கு மரியாதை செலுத்தினார்

காரைக்குடி மார்ச். 21-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவரும் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினருமான தொல். திருமாவளவன்,

சிவகங்கை வடக்கு மாவட்ட செயலாளராகப் பணியாற்றி வந்த சி.சு.இளையகவுதமனை சட்டமன்றத் தேர்தல் பணிக்குழு மாநிலச் செயலாளராக நியமனம் செய்து, கட்சியின் தலைமை சார்பாக அறிவிப்பை வெளியிட்டார்...

இதனையொட்டி மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் இளைய கவுதமன் காரைக்குடியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சிலை மற்றும் அறிவுலக ஆசான் தந்தை பெரியார் சிலைகளுக்கு தனது கட்சி நிர்வாகிகளுடன் மாலை அணிவித்து மரியாதை செய்தார்...

இந்நிகழ்ச்சியில்

மண்டல துணைச் செயலாளர் தளபதி பொன்னுச்சாமி, இளஞ் சிறுத்தைகள் எழுச்சி பாசறை மாவட்டச் செயலாளர் ராதிகா வன்மீகநாதன்,முன்னாள் மாவட்ட அமைப்பாளர் கல்லல் ஆதித்தன், காரைக்குடி நகர ஒருங்கிணைப்பாளர் ராஜா முகமது, கிழவயல் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அருண் பிரசாத், தேவகோட்டை நகர ஒருங்கிணைப்பாளர் பொறியாளர் வினோத் ராஜ்,சாக்கோட்டை ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி, சாக்கோட்டை ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் வீரசேகர், தேவகோட்டை ஒன்றிய செயலாளர் ராஜசேகர்,வெற்றியூர் தீபா சந்திரசேகர், இளஞ்சிறுத்தை ரமேஷ், சமத்துவம் குமார், ஒன்றிய பொறுப்பாளர்கள் செம்பொன் கலைநேசன்,சரவணன் சாம்பவர், அரியக்கூடிய ராஜேந்திரன், காரைக்குடி முன்னாள் நகர செயலாளர் கைவல்யன் மற்றும் அனைத்து மாநில மாவட்ட ஒன்றிய நகர முகாம் முன்னாள்,இந்நாள் நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பங்குனி உத்திரத்தை ஒட்டி வரும் ஏப்ரல் 1ம் தேதி புதன் அன்று தென்காசி மாவட்டத்தில் உள்ளூர் விடுமுறை அறிவிப்பு

தென்காசி, மார்ச்.21-

பங்குனி உத்திரத்தை ஒட்டி வரும் ஏப்ரல் 1ம் தேதி புதன் அன்று தென்காசி மாவட்டத்தில் உள்ளூர் விடுமுறை அறிவிப்பு; அந்நாளில் பொதுத்தேர்வுகள் இருப்பின் இந்த விடுமுறை பொருந்தாதுதேர்தல் பணியில் உள்ள அரசு ஊழியர்களுக்கும் இது பொருந்தாது. விடுமுறையை ஈடு செய்ய ஏப்ரல் 11ம் தேதி வேலை நாளாக அறிவித்து மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார்.







■ செங்கல்பட்டு மாவட்டம் மேற்கு தாம்பரம் முத்துரங்க பூங்கா அருகில் தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர் ராஜா அவர்கள் தாம்பரம் மாநகர கழக அலுவலகத்தை திறந்து வைத்தார் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர்கள் பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், பகுதி செயலாளர்கள் எஸ்.சேகர், செம்பாக்கம் சுரேஷ், மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, ஜோதி குமார் சி.சுரேஷ், ரமணி ஆதி மூலம், கழக பேச்சாளர்கள் எஸ்.ஜி.கருணாகர பாண்டியன், கி.வேலுமணி, மாநகர, பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# தாம்பரத்தில் ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சிகள் இணைந்து நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம்

செங்கல்பட்டு, மார்ச். 21-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சிகள் இணைந்து நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம் மேற்கு தாம்பரம் சண்முகம் சாலையில் நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கழக மகளிர் அணி செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பா.வளர்மதி தலைமை வகித்தார்.

கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன், திருக்கழுக்குன்றம் எஸ்.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம்.சின்னையா,



முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவட்டக்கழக அவைத்தலைவர் ம.தனபால், கழக மகளிர் அணி இணைச் செயலாளர் மரகதம் குமரவேல், கழக வர்த்தக அணி இணைச் செயலாளர் கே.என்.இராமச்சந்திரன், கழக மகளிர் அணி இணைச் செயலாளர் எஸ்.கணிதா சம்பத், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ப.தன்சிங், மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் ம.கரிகாலன், மீனாட்சி நித்தியசுந்தரம், சிங்கை ந.ரகுராமன், வேதா சுப்பிரமணியன்,

இரா.வெங்கடேசன், ஐ.நா.கண்ணன், வேணுகோபால், எட்வின் சுதாகர் உட்பட பலர் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர்.

மேலும் இக்கூட்டத்தில் கழக அணி நிர்வாகிகள் கே.எஸ்.மலர்மன்னன், ஜி.எம்.சாந்தகுமார், டி.மோசஸ் ஜோஸ்வா, டாக்டர் பாலாஜி ஸ்ரீகாந்த், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏ.எம்.பொன்னுசாமி, பி.கே.பரசுராமன்,

ஒன்றிய, பகுதி கழகச் செயலாளர்கள் எல்லார் செழியன், எம்.கூத்தன், ஏ.கோபிநாதன்,

இ.சம்பத்குமார், எம்.கஜா என்கிற கஜேந்திரன், சேலையூர் ஜி.சங்கர், இரா.மோகன், மாடம்பாக்கம் எம்.தேவேந்திரன், ஜெ.சீனுபாபு, மதுரைப்பாக்கம் எம்.பி.மனோகரன், எஸ்.வளையாபதி, வெ.ஜெகநாதன், பா.அப்பு என்கிற வெங்கடேசன், த.ஜெயப்பிரகாஷ், ஞா.சந்திரசேகர்ராஜா, நகர செயலாளர்கள் எம்.ஜி.கே.கோபிகண்ணன்,

, மாவட்ட அணி செயலாளர்கள் பா.இராஜப்பா, ஜி.எஸ்.புருஷோத்தமன், கார்த்திகேயன் மனோகரன், தா.முகுந்தன், குரோம்பேட்டை ஆர்.சங்கர் கணேஷ்,

கே.பி.கசிராஜபாண்டியன், தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் சி.சாய்கணேஷ், ஸ்டார் பிரபா, சுபாஷினி புருஷோத்தமன், வாணிசுரேஷ்பாபு, வாட்டர் கே.ராஜ், வட்டக் கழகச் செயலாளர் வாழை பெரியசாமி உட்பட மாவட்ட, ஒன்றிய, பகுதி, அணி நிர்வாகிகள் உட்பட திரளான கழகத்தினர் கலந்துகொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161